# இரண்டு தொகுதி இடைத்தேர்தல்: த.வெ.க.வும் அ.தி.மு.க.வும் ஏன் தோற்கடிக்கப்பட வேண்டும்?

அரசியலில் துரோகங்கள் புதிதல்ல. ஆனால், வரலாறு காணாத பெரும் பச்சைத் துரோகங்கள் மீது தான் இப்போது மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. அரசியல் கீழ்மைகள், நம்பிக்கைத் துரோகம், சுயலாபம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்ட கயமைகளின் நாடகமாக இந்தத் தேர்தல் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

யாருக்கெல்லாம் என்னென்ன துரோகங்கள் இந்தத் தேர்தலில் இழைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தாலே, த.வெ.க. ஜனநாயகத்திற்கு எவ்வளவு பெரிய தீயசக்தி என்பது தெளிவாகப் புரியும்.

**பா.ஜ.க. காட்டிய மோசமான வழிமுறைகள்**

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்த மக்கள் பிரதிநிதிகள் மாற்றுக் கட்சிக்கு ஆதரவாகச் செயல்பட்டால், 'கட்சித் தாவல் தடைச் சட்டம்' (Anti-Defection Law) பாய்ந்து அவர்களின் பதவி பறிபோகும். ஆனால், மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஒரே நேரத்தில் மாற்றுக் கட்சிக்குச் சென்றால், இச்சட்டம் செல்லுபடியாகாது. தனிப்பட்ட நபராகவோ அல்லது ஒரு சில உறுப்பினர்களாகவோ பிரிந்து சென்றால் மட்டுமே பதவி பறிபோகும்.

இந்தக் கட்சித் தாவல் தடைச் சட்டத்தை ஏமாற்ற பா.ஜ.க. கண்டுபிடித்த ஒரு வழிதான், சட்டமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி) விலக வைத்து, செயற்கையாக இடைத்தேர்தல்களைக் கொண்டுவந்து தனக்குத் தேவையான உறுப்பினர்களைப் பெறும் உத்தி. குதிரைபேரத்தை (Horse-trading) ஒழிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை, நாடு முழுவதும் பா.ஜ.க. இவ்வாறு நீர்த்துப்போகச் செய்தது.

**சில முக்கிய உதாரணங்கள்:**

- கர்நாடகா: 2018 தேர்தலில் இங்கு காங்கிரஸ் - மதச்சார்பற்ற ஜனதா தளம் (JD-S) கூட்டணி ஆட்சி அமைத்தது. ஆனால் 2019-இல், இக்கூட்டணியைச் சேர்ந்த 16 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர். இதனால் கூட்டணி அரசு பெரும்பான்மையை இழந்து கவிழ்ந்தது. பின்னர், ராஜினாமா செய்த உறுப்பினர்கள் பா.ஜ.க-வில் இணைந்து இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றனர். பா.ஜ.க. அங்கு ஆட்சி அமைத்தது.
- **மத்தியப் பிரதேசம்:** 2022-இல் ஜோதிராதித்யா சிந்தியா தலைமையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 22 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்தனர். கமல்நாத் தலைமையிலான காங்கிரஸ் அரசு பெரும்பான்மையை இழந்து கவிழ்ந்தது. அதன்பின், பா.ஜ.க-வின் சிவராஜ் சிங் சவுகான் மீண்டும் முதலமைச்சரானார்.
- **கோவா** : 2019-இல் காங்கிரஸின் 15 சட்டமன்ற உறுப்பினர்களில் 10 பேர் பா.ஜ.க-வில் இணைந்தனர். மூன்றில் இரண்டு பங்கு என்பதால் தகுதிநீக்கம் வரவில்லை. மீண்டும் 2022 தேர்தலுக்குப் பிறகு, காங்கிரஸின் 11 உறுப்பினர்களில் 8 பேர் பா.ஜ.க-வில் இணைந்தனர். இதன்மூலம் பா.ஜ.க. தனது பலத்தைச் சட்டமன்றத்தில் கணிசமாக உயர்த்திக் கொண்டது.
- **பிற மாநிலங்கள்:** புதுச்சேரி (Puducherry - 2021), அருணாச்சலப் பிரதேசம் (Arunachal Pradesh - 2016) மற்றும் மணிப்பூர் (Manipur), மேகாலயா (Meghalaya) போன்ற வடகிழக்கு மாநிலங்களிலும் வெவ்வேறு காலகட்டங்களில் இதே உத்தியைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சி ஆட்சிகளை - முக்கியமாகக் காங்கிரஸ் ஆட்சிகளை - பா.ஜ.க. வீழ்த்தியது.

இதே பாணியில் இப்போது அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களைக் குதிரைபேரத்தின் மூலம் த.வெ.க. விலைக்கு வாங்கியுள்ளது. கட்சித் தாவல் தடைச் சட்டத்திலிருந்து தப்பிக்க அவர்களை ராஜினாமா செய்ய வைத்து, அவர்களையே தன் கட்சியின் சார்பில் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடவும் வைத்துள்ளது.

பா.ஜ.க-வின் குதிரைபேரத்தினால் பல மாநிலங்களில் தங்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்தபோது கூக்குரலிட்ட காங்கிரஸ் இப்போது அதே த.வெ.க-வுடன் கைகோர்த்து நின்று அந்த ஜனநாயக விரோதச் செயலுக்குத் துணைபோகிறது. ஓர் எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தி, மக்கள் தீர்ப்பைக் காலில் போட்டு மிதிக்கும் செயல் இனி காங்கிரசிற்கு எதிராக எங்கு நடந்தாலும், அதைக் கண்டிக்கும் தார்மீக உரிமையை ராகுல் காந்தி இழந்து விட்டார்.

**சொந்தக் கட்சிக்குச் செய்த துரோகம்:**

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளில் நான்கு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இரண்டு வேட்பாளர்களும், தேர்தல் முடிவுகள் வந்த பத்தே நாட்களில் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. பக்கம் போயிருக்கிறார்கள்.

கட்சியோடு எந்த முரண்பாடும் இல்லை; கட்சித் தலைமையோடு எந்த முரண்பாடும் இல்லை. வெறும் பேரத்தின் அடிப்படையில் தங்கள் அரசியலைத் த.வெ.க-விற்கு விற்று, இடைத்தேர்தலை வரவழைத்துள்ளார்கள். இரட்டை இலைச் சின்னத்தில் நின்று வாக்கு கேட்டவர்கள், இப்போது 'விசில்' சின்னத்தை எடுத்து ஊதிக்கொண்டு ஓட்டுக்கேட்க வரப் போகிறார்கள். நான்கு மாதங்களுக்கு முன்பு எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோரைக் காட்டி ஓட்டுக்கேட்டவர்கள், இப்போது விஜய்யைக் காட்டி ஓட்டுக்கேட்கப்போகிறார்கள்.

ஒரு கட்சியின் தொண்டர்கள் ஒரு வேட்பாளரின் வெற்றிக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள். கட்சிக்காகப் பணிபுரிந்த பலருக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டே ஒருவர் வேட்பாளராகத் தேர்வு பெறுகிறார். அவரின் வெற்றிக்காக அந்தச் சொந்தக் கட்சி பெருமளவு பணத்தைச் செலவழிக்கிறது. ஆனால், "கட்சியாவது... புடலங்காயாவது..." என்று, வெற்றி பெற்றவுடனேயே, எந்தக் கட்சியை எதிர்த்து நின்றார்களோ அதே கட்சிக்குத் தாவுகிற இவர்கள், எந்தக் கூச்சமும் இன்றி மீண்டும் ஓட்டுக்கேட்க வருகிறார்கள். இவ்வளவு கேவலமான அரசியல் கயமைத்தனத்தை இதுவரை தமிழகம் கண்டதில்லை.

இவர்களுக்கு வாக்களிக்கலாமா?

**வாக்களித்த மக்களுக்குச் செய்த துரோகம்:**

ஒரு வேட்பாளரை மக்கள் தேர்வு செய்யும்போது, தாங்கள் ஆதரிக்கும் கட்சியை அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று நம்பியும், அடுத்த ஐந்தாண்டுகளுக்குத் தங்கள் பிரதிநிதியாகத் தொகுதியின் நலன்களைப் பாதுகாப்பார் என்று நம்பியுமே வாக்களிக்கிறார்கள்.

ஆனால், யாரிடமிருந்தோ கிடைக்கும் சுயலாபத்திற்காக அந்த நம்பிக்கையை, அந்த வாக்குகளை, அந்த வாக்காளர்களை விலைபேசி விற்றுவிட்டு, இப்போது மீண்டும் அந்த மக்களிடமே வந்து வாக்குக் கேட்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு அந்த மக்களை ஆட்டு மந்தையாக இவர்கள் நினைக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இது அவர்களுக்கு வாக்களித்த மக்கள் மீது செய்த மிகப்பெரிய நம்பிக்கை மோசடி அல்லவா?

இவர்களுக்கா அந்தத் தொகுதி மக்கள் மீண்டும் வாக்களிக்க வேண்டும்?

**கூட்டணிக் கட்சிகளின் துரோகம்:**

இன்று த.வெ.க. கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ், பல மாநிலங்களில் குதிரைபேரத்தால் தாங்கள் ஆட்சியிழந்து பாதிக்கப்பட்டபோது கூச்சல் போட்டுவிட்டு, இப்போது பதவி சுகத்திற்காகத் த.வெ.க-விற்கு வெண்சாமரம் வீசுகிறது என்பதை மேலே குறிப்பிட்டேன். "விஜய்தான் பிரதமர் வேட்பாளர்" எனத் த.வெ.க. அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசித்திரிந்து, காங்கிரஸின் பிரதமர் வேட்பாளரான ராகுல் காந்திக்குத் துரோகம் செய்தபோதும், காங்கிரஸுக்கு அதைப் பற்றி எந்த உறுத்தலும் இல்லை.

இந்த இடைத்தேர்தலில் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யப்போகும் அதன் கூட்டணிக் கட்சிகள், நான்கு மாதங்களுக்கு முன்பு தி.மு.க. கூட்டணியில் நின்றவை. இப்போது த.வெ.க. சார்பில் இடைத்தேர்தலில் நிறுத்தப்பட்டிருக்கும் இதே வேட்பாளர்கள் அன்று அ.தி.மு.க. வேட்பாளர்களாக இருந்தபோது, அவர்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார்கள்; த.வெ.க-வையும் விஜய்யையும் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார்கள்.

**அந்தச் சுவடுகூட இன்னும் காயவில்லை. அதற்குள் மேடைகள் மாறிவிட்டன; சின்னங்கள் மாறிவிட்டன. அ.தி.மு.க-வுக்குத் துரோகம் செய்த அதன் சட்டமன்ற உறுப்பினர்களின் கயமைத்தனத்தைக் காட்டிலும் மிகப் பெரியது, இப்போது த.வெ.க-வின் கூட்டணிக் கட்சிகளின் கயமைத்தனம்.**

**எந்த நம்பகத்தன்மையுமற்ற இந்தக் கட்சிகள் ஆதரிக்கும் வேட்பாளர்களுக்கா மக்கள் வாக்களிக்க வேண்டும்?**

விஜய் அரசு தமிழகத்திற்குச் செய்யும் துரோகம்:

விஜய்யின் நான்கு மாத கால ஆட்சி தமிழக மக்களுக்குச் செய்தது என்ன?

- அரசின் உயர் பதவிகள் தகுதியற்ற நபர்களுக்குத் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தாரை வார்க்கப்பட்டன.
- எதிர்க்கட்சியான தி.மு.க.மீது பொய்யான குற்றச்சாட்டுகளும் அவதூறுகளும் பரப்பப்பட்டன.
- குதிரைபேர அரசியல் மூலம் ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டது.
- பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பரந்தூர் விமான நிலையம், விளையாட்டு நகரத் திட்டங்கள் போன்றவை கைவிடப்பட்டன.
- தமிழகத்திற்கு வர வேண்டிய தொழில் முதலீடுகள், (அண்டை மாநிலங்களுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன.
- முக்கியமான தேர்தல் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.
- அரைகுறையாக நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகளிலும் பயனாளிகளுக்குப் பல்வேறு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.
- சட்டமன்றத்தைச் சண்டை மன்றமாக மாற்றி நடத்திய நாடகங்கள்.



**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர்,
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

- அறிவிக்கப்படாத மின்வெட்டு.
- அறிவிக்கப்படாத மின் கட்டண உயர்வு.
- அறிவிக்கப்படாத சொத்துவரி உயர்வு.
- பழனியாண்டவர் கோவில் ரூ.100 கோடி நில மோசடி, அரசு வழக்கறிஞர் பதவிக்கு லஞ்சம்.
- போதைப் பொருள் பெருக்கம்
- கஜானா காலி எனச் சொல்லிக்கொண்டே முதலமைச்சர் அறையை மாற்றுவது, ரூ.1200 கோடி செலவில் முதலமைச்சர் வீட்டருகே புதிய சட்டமன்றக் கட்டட அறிவிப்பு என வீண் விரையங்கள்.
- கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு.
- காவல்துறையின் காட்டுத் தர்பார்.
- எதிர்க்கட்சிகள், மாணவர் அமைப்புகள் மீது பொய் வழக்குகள் மற்றும் கடும் ஒடுக்குமுறைகள்.
- இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் எந்தத் திட்டமும் இல்லை.
- ஒன்றிய அரசின் (Central Government) மாநில உரிமைகளைப் பறிக்கும் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ துணை போவது.
- கடும் விலைவாசி உயர்வு.
- இடைத்தேர்தல் நடக்கும் மதுராந்தகம் தொகுதியில் கடும் மின்வெட்டு மற்றும் குடிநீர்ப் பிரச்சினை.

துயரங்களின் கூடாரமாகத் தமிழ்நாட்டை மாற்றியிருக்கும் இந்த அரசின் வேட்பாளர்களுக்கா மக்கள் வாக்களிக்க வேண்டும்?

**அ.தி.மு.க. களத்தில் இருக்கிறதா?**

ம.தி.மு.க. தலைவர் வைகோ தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியேறி த.வெ.க.விற்கு சேவகம் செய்யச் சென்றபோதும், தி.மு.க. கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் நின்று போட்டியிட்டு வென்ற ம.தி.மு.க. உறுப்பினர்கள் இருவரும் தி.மு.க. தலைவரின் தலைமை மீது கொண்ட நம்பிக்கையினால் தங்களிடம் நடத்தப்பட்ட குதிரைபேரத்தை நிராகரித்தனர்.

ஆனால், எடப்பாடி பழனிசாமியால் தன் சொந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிடம்கூட எந்த ஆளுமையையும் செலுத்த முடியவில்லை. அவர்கள் ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க-வில் போய் சேருவதைத் தடுக்க முடியவில்லை. எஸ்.பி. வேலுமணி தலைமையிலான அதிருப்தி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், தனது உத்தரவை மீறி நம்பிக்கை கோரும் தீர்மானத்தில் த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தபோதே, கட்சியில் எடப்பாடி பழனிசாமிக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்பது நிரூபணமாகி விட்டது.

சட்டமன்றத்தில் த.வெ.க. அரசுக்கு எதிராக அ.தி.மு.க. உறுப்பினர்களோ எடப்பாடி பழனிசாமியோ எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தவில்லை. தனக்குத் துரோகம் செய்துவிட்டு, கட்சித் தாவல் தடைச் சட்டம் காரணமாக வேறு வழியின்றித் தன் பின்னால் அமர்ந்திருக்கும் எஸ்.பி. வேலுமணி கோஷ்டியை வைத்துக்கொண்டு, எடப்பாடி பழனிசாமியால் என்ன எதிர் அரசியல் செய்ய முடியும்?

இந்த இடைத்தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றால்கூட, அவர்கள் நாளை எங்கே போவார்கள், யாரை ஆதரிப்பார்கள் என்ற எந்த நிச்சயமும் இல்லை. அந்த அளவுக்கு எடப்பாடி பழனிசாமி தன் கட்சியைத் துரோகங்களுக்குப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்.

நேற்று பா.ஜ.க.-வாலும் இன்று த.வெ.க-.வாலும் சுக்கல் சுக்கலாக உடைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு இந்த இடைத்தேர்தலில் வாக்களிப்பதில் ஏதேனும் பயன் உண்டா?

**இடைத்தேர்தலில் தி.மு.க.வின் பலம்:**

தேர்தல் நடக்கும் இரண்டு தொகுதிகளும் அ.தி.மு.க. கடந்த சட்டமன்றத் தேர்தலில் வென்ற தொகுதிகள் என்பதால், அவை அ.தி.மு.க-வின் கோட்டை என்பது போன்று சில ஊடகவியலாளர்கள் சித்தரிக்கின்றனர். ஆனால், இரண்டு தொகுதிகளிலுமே அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. வேட்பாளர்களுக்கு இடையே கடந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்குச் சதவீதம் மிகக் குறைவுதான். மேலே குறிப்பிட்ட பல காரணங்களால், தற்போது தி.மு.க-வின் நம்பகத்தன்மையும் வெற்றி வாய்ப்பும் பெருமளவு அதிகரித்திருக்கின்றன.

**தி.மு.க-வுடன் இருந்த கூட்டணிக் கட்சிகள் இப்போது த.வெ.க-வுடன் இருப்பதை தி.மு.க-வின் பலவீனமாகச் சிலர் சித்தரிக்கின்றனர். அது தவறான பார்வை. தங்கள் துரோக நடத்தையால் இந்தக் கட்சிகளின் வாக்குச் சதவீதம் பெருமளவு குறைந்திருக்கவே வாய்ப்பிருக்கிறது. இவர்கள் த.வெ.க-விற்குச் சாதகமாகவோ, தி.மு.க-விற்குப் பாதகமாகவோ எந்தச் செல்வாக்கையும் செலுத்த முடியாது.**

தி.மு.க. என்பது கடினமான காலங்களில் தீவிரமாக எதிர்த்துப் போராடி மீண்டு வரும் கட்சி. தி.மு.க.-விற்குத் த.வெ.க. அரசு செய்துவரும் தீங்குகளும், தி.மு.க. தலைவர்கள் மீது செய்யப்படும் அவதூறுகளும் இழிசெயல்களும் கழகத் தொண்டர்களைக் கொதித்தெழச் செய்துள்ளன. அவர்கள் இந்தத் தேர்தலில் மிகக் கடுமையான உழைப்பைச் செலுத்துவார்கள். மேலும், தி.மு.க. தலைவர் மீது விஜய் காட்டிவரும் அநாகரிகமான வெறுப்புணர்ச்சி, மக்களிடம் தி.மு.க. மீது பெரும் பரிவை உண்டாக்கியிருக்கிறது.

தி.மு.க., மக்களுக்காக, மக்களின் பிரச்சினைகளுக்காக, ஜனநாயகத்திற்காக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகக் களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சியின் சாதனைகளுக்காகவும், தி.மு.க. தலைவரின் மக்கள் நலன் சார்ந்த அரசியல் மாண்புகளுக்காகவும், ஓர் விபத்தைப் போல ஆட்சிக்கு வந்து தமிழகத்தைச் சூறையாடிக் கொண்டிருக்கும் ஒரு தீய சக்திக்குப் பாடம் புகட்டவும் இந்த இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்கள் வெல்வது அவசியமாகும். தமிழக மக்கள் தாங்கள் செய்த பெரும் தவறைச் சரிசெய்துகொள்வதற்கான முதல் படியாக இந்த இடைத்தேர்தல் இருக்கும்.



தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அவைத்தலைவர் செல்வராஜ் தலைமையிலும்,மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி,தலைமை கழக மறுசீரமைப்பு குழுவின் பிரதிநிதகள் கழக தீர்மானக்குழு துணைத் தலைவர் பார் இளங்கோவன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஜெயராம கிருஷ்ணன், ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, பி.என்.பி.இன்பசேகரன், தருமச்செல்வன், முன்னாள் எம்.பி.டி.என்.வி.செந்தில் குமார், தருமபுரி, பென்னாகரம், அரூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள்,முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,கிளை கழகத்தினர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக சீரமைப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டது.



தருமபுரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் காரிமங்கலத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.மனோகரன் தலைமையில்,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ.மணி,எம்.பி,தலைமை கழக மறுசீரமைப்பு குழுவின் பிரதிநிதிகள் கழக தீர்மானக்குழு துணைத் தலைவர் பார் இளங்கோவன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் எம்.பி.டி.என்.வி.செந்தில்குமார் உள்ளிட்ட பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு தொகுதி மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். செயற்குழுக் கூட்டத்தில்,முப்பெரும் விழா,மற்றும் கழக நிர்வாக மறுசீரமைப்பு குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.